ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

e-Newsletter

Vol 02: No: 06 - July 2012

Website: www.pccsl.lk
E-mail: pccsl@pccsl.lk
Tel: +94 115 353635
Fax: +94 115 335500

# இன அடிப்படையிலான இம்சைப்படுத்தல்

குற்றச் செயல்கள் தொடர்பான அறிக்கையிடலின் போது பத்திரிகைகளில் தொடர்ச்சியாக “முஸ்லிம் இனத்தவர்” என்ற அடிப்படையில் இனத்தைச் சுட்டிக்காட்டும் வகையிலான அறிக்கையிடல் தொடர்பாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் ஊடகவியலாளர் அமைப்பு அண்மையில் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடொன்றைச் செய்திருக்கின்றது.

இந்த அமைப்பு தொடர்ச்சியாக ஊடகங்களின் அறிக்கையிடலை கண்காணித்த பின்னர் இவ்வாறு தொடர் தவறு நிகழ்ந்து வருவதையிட்டு கவலை தெரிவித்திருப்பதோடு முஸ்லிம் சமூகம் தொடர்பாக ஏனைய சமூகத்தவர்கள் மத்தியில் தப்பெண்ணத்தை ஏற்படுதும்விதமான அறிக்கையிடலை தவிர்க்க வேண்டும் என்றும் கோரியிருக்கின்றது. குறிப்பாக சிங்கள மொழிமூலமான பத்திரிகைகளே குற்றச் செய்கள் தொடர்பாக செய்திகளை பிரசுரிக்கின்ற போது இத்தகைய அனுகுமுறையைப் பின்பற்றி வருவது இந்த முறைப்பாட்டின் ஊடாக சுட்டிக்காட்டப் பட்டிருக்கின்றது.

இத்தகைய அறிக்கையிடலானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு அறிமுகப்படுத்தியிருக்கின்ற பத்திரிகைத்துறைசார் ஒழுக்கக் கோவையின் பிரிவு 06 மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட உப பிரிவுகளையும் மீறியிருப்பதாக சுட்டிக்காட்டப் பட்டிருக்கின்றது. பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பத்திரிகைத்துறையினருக்கான ஒழுக்கக்கோவையின் பொதுவான அறிக்கையிடல் தொடர்பான பிரிவுகள் இத்தகைய முறையிலான அறிக்கையிடலைத் தவிர்க்க வேண்டும் என்று வலியுறுத்துவது ஊடகங்கள் கவணத்தில் எடுக்க வேண்டிய விடயமாகும்.

இந்த முறைப்பாடு தொடர்பாக கவனம் செலுத்திய இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு தினசரி “லங்காதீப”, “லக்பிம”, திவயின தினசரி மற்றும் ஞாயிறு வெளியீடுகள், தினசரி மவ்பிம மற்றும் “ரிவிர” ஆகிய பத்திரிகைகளின் பிரதம மற்றும் செய்தி ஆசிரியர்களின் கவனத்திற்கு இவ்விடத்தைச் சமர்ப்பித்திருக்கின்றது. அத்துடன் எதிர்காலத்தில் இவ்வாறான அமைப்பிலான அறிக்கையிடலைத் தவிர்க்குமாறும் ஆலோசனை வழங்கியிருக்கின்றது.

உலகின் ஏனைய நாடுகளின் ஒழுக்கக்கோவைகள் இவ்வாறான விடயம் தொடர்பான அறிக்கையிடலில் எத்தகைய அனுகுமுறையைப் பின்பற்றுகின்றது என்பதை அவதானிக்கையில் அவற்றிலும் இவ்வாறான இன ரீதியான மனத்தாங்களை ஏற்படுத்தும் வகையிலான அறிக்கையிடல் தவிர்க்கப்படும் வகையில் பிரிவுகள் உட்படுத்தப்பட்டிருப்பதை காண முடிகின்றது.

**இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு**

2 பொதுவான செய்தி அறிக்கை மற்றும் எழுத்தில் வடித்தல்

6.1 அக்கிரமம், வன்செயல்கள், ஔடதங்களின் துஷ்பிரயோகம், கொடூரத்தன்மை பிறருக்கு நோவினை செய்தல், காமம் மற்றும் ஒழுக்கக்கேடு போன்ற குறிப்பாக அதிர்ச்சியூட்டும் அத்துடன் உணர்வுகளில் நோவினையை ஏற்படுத்தும் சுபாவத்தையுடைய சமூகப் பிரச்சினைகளைப் பற்றிய விடயங்கள் தொடர்பாக அச்சு ஊடகம் பொது நலன் கருதிச் செய்திகளைப் பிரசுரிக்கும் அதன் கடமைக்கமைய உண்மைச் சம்பவங்கள் கருத்துக்கள் புகைப்படங்கள் மற்றும் சித்திரங்களை உரிய உணர்வுடனும் விவேகத்துடனும் சமர்ப்பிக்க விஷேட கவனம் எடுக்க வேண்டும்.

6.2 குற்றச் செயல்கள் அல்லது குற்றச் செயல் வழக்கு பற்றிய விடயங்களை அறிவிக்கும்போது சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டு மற்றும் பொது நலன் கருதி அல்லாமல் பின்வருவனவற்றைப் பிரசுரிக்கக் கூடாது.

பாலியல் குற்றச் செயலினால் பாதிக்கப்பட்டவரின் பெயர், விபரங்கள்

- குற்றச் செயல் பற்றி குற்றம் சாட்டப்பட்ட 16 வயதுக்குட்பட்ட மற்றும் முன்பு தண்டணை அனுபவித்திராத இளம் வயதினர் ஒருவரின் பெயரை வேண்டுமென்றே குறிப்பிடல்
- குற்றச் செயலொன்றுக்காக அல்லது தண்டனை வழங்கப்பட்டுள்ள ஒருவரின் உறவினர்களை அவர்களது

தொடர்ச்சி 3ம் பக்கம்

## ஊடகவியலாளர்களுக்கான விருது வழங்கல் 2011




இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தால் ஏற்பாடு செய்யப்படுகின்ற சிறந்த ஊடகவியலாளர்களுக்கான விருது வழங்கள் 2011 நிகழ்ச்சி அண்மையில் மவுன்ட் லெவினியா ஹோட்டலில் நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படம். ஆண்டின் சிறந்த ஊடகவியலாளருக்கான மேவின் டி சில்வா விருதை லக்பிம பத்திரிகையின் ஊடகவியலாளர் சுரங்க வீரகுலசூரிய பிரதம அதிதி கனக் மணி டிக்சிட்டிடம் இருந்து பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம்.

## ‘பெல் பொடிங்கர்’ நிறுவனம் தொடர்பான கட்டுரைக்கு எதிரான முறைப்பாட்டை இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு நிராகரிப்பு

“பெல் பொண்டிங்கா” என்பது இங்கிலாந்தில் இருந்து இயங்கி வரும் பொதுத் தொடர்பாடல் கம்பனியாகும். இந்நிறுவனத்தின் செயற்பாடு தொடர்பாக இங்கிலாந்தின் “இன்டிபென்டன்ட்” பத்திரிகையில் அண்மையில் தொடர்ச்சியாக பிரசுரிக்கப்பட்ட கட்டுரைகள் பற்றி பெல் பொண்டிங்கர் என்ற நிறுவனம் இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாட்டை செய்திருந்தது. இந்த முறைப்பாட்டை விசாரணை செய்த இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு பத்திரிகை பிரசுரித்த விடயத்தில் அந்நாட்டின் பத்திரிகைத் துறைசார் ஒழுக்கக் கோவை மீறப்படவில்லை என்றும் பத்திரிகை பிரசுரித்திருந்த விடயம் சரியானது என்று தீர்ப்பு வழங்கியிருந்தது. இந்த முறைப்பாட்டை விசாரணை செய்த இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகள் குறிப்பிட்ட தொடர் கட்டுரை வெளியீடானது அந்நாட்டின் பத்திரிகைத்துறைசார் ஒழுக்கக்கோவையின் பிரிவு 10 யை மீறவில்லை என்றும் தீர்ப்பளித்திருக்கின்றது. இந்த முறைப்பாடு தொடர்பான விபரம் வருமாறு: - இங்கிலாந்தின் “இன்டிபென்டன்ட்” பத்திரிகை பெல் பொடிங்கர் தொடர்பாக தொடர் கட்டுரையொன்றை பிரசுரித்து வந்தது. இந்த கட்டுரை பொடிங்கர் நிறுவனத்திற்கும் உஸ்பெகிஸ்தான் அரசாங்கத்திற்கும் இடையில் நிலவிய இரகசியத் தொடர்பு பற்றிய விடயங்களை இரகசியமான முறையில் தகவல்களாகத் திரட்டி வெளியிட்டிருந்தது. இந்த கட்டுரை மேற்படி நிறுவனத்திற்கும் உஸ்பெகிஸ்தான அரசாங்கதிற்கும் இடையில் இருந்து வந்த பல முக்கிய விடயங்களிலான இரகசியத் தொடர்புகள் பற்றிய உள் விவகாரங்களை அம்பலப்படுத்துவதாக அமைந்திருந்துள்ளது. இவ்விடயங்களை இங்கிலாந்தின் “இன்டிபென்டன்ட்” பத்திரிகையின் புலனாய்வுச் செய்தித்தேடல் பணியகம் இரகசியமான முறையில் திரட்டிய தகவல்களை மையமாக வைத்து எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இந்த கட்டுரைத் தொடர் பற்றி பொடிங்கர் நிறுவனத்தை வழிநடத்தும் பெல் பொடிங்கர் இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்திருந்ததோடு இத்தகைய அடிப்படையில் தனி நபர்கள் மற்றும் நிறுவனம் ஒன்றின் தனிப்பட்ட தொடர்புகள் பற்றிய விடயங்களை பிரசுரிப்பது பத்திரிகைத் துறைசார் ஒழுக்க நெறிக்கோவைக்கு முரணானது என்றும் இத்தகைய விடயங்களைப் பிரசுரிப்பதை நிறுத்த வேண்டும் என்று கோரியிருந்தார். இந்த முறைப்பாடு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது பத்திரிகையானது இவ்வாறான விடயங்கள் பொதுமக்கள் ஆர்வத்தைத் தூண்டக்கூடியதாக அமைவதாகவும் அவை பற்ற விடயங்கள் பொதுமக்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைவதாலும் குறிப்பிட்ட கட்டுரை பிரசுரிக்கப்பட்டது என்றும் வாதங்களை முன்வைத்திருந்தது. இந்த வாதங்களை ஆராய்ந்த ஆணைக்குழு குறிப்பிட்ட விடயமானது பொதுமக்கள் ஆர்வத்தைத் தூண்டக்கூடியது என்றும் குறிப்பிட்ட விடயம் அக்காலப்பகுதியில் முக்கியமானதும் சர்ச்சையைக் கிளப்பியதுமான விடயம் என்றும் பத்திரிகை தர்க்கங்களை முன்வைத்தது. ஆனாலும் பெல் பொன்டிங் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் இத்தகைய பிரசுரமானது குறித்த பத்திரிகையின் புலனாய்வுத் தேடல் பிரிவின் தேடலானது எந்த வகையிலும் பொருத்தமற்றதும் எந்த விதத்திலும் முக்கியத்துவம் இல்லாதுதமான விடயமாகும் என்றும் விவாதித்தது. இவ்விடத்தை பிரசுரித்ததால் பத்திரிகை மக்களை தவறான வழிக்கு இட்டுச் சென்றுள்ளது என்றும் பொன்டிங் தெரிவித்துள்ளார். ஆனாலும் இந்த முறைப்பாடு தொர்பாக கவனம் செலுத்திய இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு இந்த விடயத்தில் பத்திரிகையின் புலனாய்வுப் பிரிவினர் குறித்த விடயம் தொடர்பாக பல்வேறு கோணங்களில் கவனம் செலுத்தியிருப்பதோடு பத்திரிகை குறிப்பிடுவது போன்று குறிப்பிடத்தக்க அளவுக்காயினும் இவ்விடயம் பொதுமக்களது ஆர்வத்தைத் தூண்டக் கூடிய விடயம் என்பதையும் ஆணைக்குழு முறைப்பாட்டாளருக்கு தெரிவித்ததோடு ஒழுக்கக்கோவையின் பிரிவு 10 குறிப்பிடுகின்றது போன்று தகவல்கள் ஒழுக்கக் கேவைக்கு முரணானவிதத்தில் பெறப் பட்டிருக்கவில்லை என்பதையும் உறுதி செய்தது. இருந்த போதும் இவ்வாறான விடயங்களில் பத்திரிகைகள் போதியளவு கவனத்துடனும் அவதானத்துடனும் செயற்பட வேண்டும் என்ற ஆலோசனையையும் இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பிரதானி சாலட் டெவர் கேட்டுக் கொண்டுள்ளார். அதன்படி இந்த முறைப்பாடு தொடர்பான தீர்ப்பு பத்திரிகைக்கு சார்பானதாகவே அமைந்திருந்தது. (நன்றி: இங்கிலாந்து ப.மு.ஆ.கு வெளியீடு 2012 யூலை 26)

**இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தற்போதைய பணிப்பாளர் சபை**

சிவகுமார் நடேசன் (தலைவர்) ஏனைய உறுப்பினர்கள் வருமாறு: நிமல் வெல்கம, சிங்ஹ ரட்னதுங்க, மனிக் த சில்வா, என்.எம்.அமீன், சுந்தர நிஹதமானி த மெல், சிறி ரணசிங்க, சீதா ரஞ்சனி, ஜி. கொத்திகொட, மற்றும் அஜந்தா அப்புஹாராச்சி.

**இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் செயலகம்**

சுகுமார் ரொக்வூட் – பதில் பிரதம நிறைவேற்று அதிகாரி, கமல் லியனாரச்சி - சிங்கள மொழி மூல முறைப்பாட்டு பொறுப்பதிகாரி, எம்.எஸ். அமீன் ஹுசைன் - தமிழ் மொழிமூல முறைப்பாட்டு பொறுப்பதிகாரி

# நிதி உதவி கோரும் தகவலை பிரசுரம் செய்தமைக்காக பத்திரிகை சிறுமியின் குடும்பத்தாரிடம் மன்னிப்புக் கோரியது - இங்கிலாந்தில் சம்பவம்

இங்கிலாந்தில் "கெம்பர்லி நியுஸ்" மற்றும் "மெயில்" ஆகிய பத்திரிகைகள் 13 வயது சிறுமி ஒருவருக்கு மருத்துவ செலவுக்காக நிதி உதவி அவசியம் என்ற அடிப்படையிலான தகவல் ஒன்றைப் பிரசுரித்திருந்தது. ஆனாலும் இத்தகவல்கள் அந்த சிறுமியினதோ அல்லது அச்சிறுமியின் குடும்பத்தினதோ அனுமதி பெறாமலே பிரசுரம் செய்திருந்தது. இவ்விடயம் தொடர்பாக அச்சிறுமியின் பெற்றோர் இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த முறைப்பாட்டை கவனத்தில் எடுத்துக் கொண்ட முறைப்பாட்டு ஆணைக்குழு குறித்த பிரசுரத்தில் இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பத்திரிகைத்துறைசார் ஒழுக்கக்கோவையின் தனித்துவம் தொடர்பான பிரிவு 3 மற்றும் சிறுவர்கள் தொடர்பான செய்தி மற்றும் தகவல் வெளியீடு பிரிவு 6 என்பன மீறப்பட்டிருப்பதாக தீர்ப்பளித்திருந்தது. அதன்படி "கெம்பர்லி நியுஸ்" மற்றும் "மெயில்" ஆகிய பத்திரிகைகள் அச்சிறுமியின் குடும்பத்தாரிடம் மன்னிப்புக் கேர வேண்டியேற்பட்டது.

இங்கிலாந்தைச் சேர்ந்த 13 வயது சிறுமி ஒருவருக்கு மருத்துவ தேவைக்கு நிதி உதவி அவசியம் என்று அவரின் நண்பர்கள் ஏற்பாடு செய்திருந்த நிதி திரட்டும் நடவடிக்கைக்கமைய குறிப்பிட்ட பத்திரிகைகளுக்கு அனுப்பிவைத்திருந்த தகவல்களை அப்பத்திரிகைகள் பிரசுரம் செய்திருந்தன. அப்பிரசுரத்தில் குறிப்பிட்ட சிறுமி உடல் நிலை பாதிக்கப்பட்டு மோசமான நிலையில் இருப்பதாகவும் அவருக்கு மருத்துவ செலவுக்காக பெருமளவு பணம் தேவை என்றும் குறிப்பிட்டு அவரின் புகைப்படம் மற்றும் பெயருடன் தகவல் வெளியிட்டிருந்தன.

ஆனாலும் சிறுமியின் பெற்றோர் முறைப்பாட்டில் குறிப்பிடுகையில் "இப்பிரசுரத்திற்கு தமது அனுமதியை கோரவில்லை என்றும் இவ்வாறு நிதி உதவி கோரும் வகையில் தகவல் பிரசுரிக்கப்பட்டமை தங்களது குடும்பத்திற்கும் சிறுமிக்கும் மன வேதனை யையும் கௌரவத்திற்கு ஒருவகையான பாதிப்பையும் ஏற்படுத்தியிருக்கின்றத? என்று தெரிவித்திருந்தனர்.

குறித்த நிதி சேகரிப்பில் ஈடபட்டவர்களிடம் தமக்கு அவ்வாறான உதவிகள் தேவைப்படும் போது அதுபற்றி தெரிவிப்பதாக கூறியிருந்ததாகவும் நிதி சேகரிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டிருந்த போதும் அவர்கள் சிறுமிக்காக இவ்வாறு நிதி உதவி கோரும் வகையில் தகவல்களை பத்திரிகைக்கு அனுப்பியிருந்ததாக சுட்டிக்காட்டியிருந்தனர்.

இம்முறைப்பாடு தொடர்பாக கவனம் செலுத்திய இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் செலாட் டெவர் கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது:-

பத்திரிகைகள் நல்ல நோக்கத்தில் சிறுமிக்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்தில் தான் தகவலை வெளியிட்டிருந்தன. ஆனாலும் பத்திரிகைத்துறையினருக்கான ஒழுக்கக்கோவை சிறுவர்கள் தொடர்பான விடயங்களை பிரசுரிக்கையில் எத்தகைய அவதானத்தைச் செலுத்த வேண்டும் என்று தெளிவாகக் கூறியிருக்கின்றது. அதில் முக்கியமான விடயம் சிறுவர்கள் தொடர்பில் அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலரின் அனுமதியுடன் தான் ஏதாவது விடயங்கள் பிரசுரிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடுவதால் பத்திரிகை இப்பிரசுர விடயத்தில் அந்த விடயத்தை மீறியிருக்கின்றது.

சிறுமியின் உடல் நலத்தைக் கருத்தில் கொண்டு உதவும் நோக்கம் கொண்டிருந்தாலும் அவரின் பெற்றோரின் அனுமதியைப் பெற்றிராதது தவறாகும் என்று சுட்டிக்காட் டியுள்ளார். அவ்வாறு செய்திருந்தால் ஒழுக்கக்கோவை மீறல் இடம்பெற்றிருக்காது என்றும் அவர் மேலும் தெரிவித்திருந்தார். அதன்படி பத்திரிகைகள் அந்த சிறுமிக்காக மன்னிப்புக் கோர வேண்டியேற்பட்டது.

---

**இன அடிப்படையிலான இம்சைப்படுத்தல்** (1ம் பக்க தொடர்ச்சி)

சம்மதம் இன்றி இனம் காண்பித்தல்.

6.3 ஊடகவியலாளர் ஒருவர் தாம் அறிந்திருந்தும் அல்லது வேண்டுமென்றே இன, மத, ரீதியான முரண்பாடுகளுக்கு வழிவகுக்கும் வகையில் சமய ஒற்றுமையின்மையை அல்லது வன்செயல்களைத் தூண்டும் வகையில் தமது எழுத்துக்களைக் கையாளக்கூடாது.

6.4. i ஒருவரின் குலம், நிறம், மதம், பாலியல் அல்லது ஏதுமொரு உடல் அல்லது பலவீனம் பற்றித் தப்பபிப்பிரா யத்தை ஏற்படுத்தக்கூடிய அல்லது அறியா யமாகக் குறிப்பிடுவதில் இருந்து ஊடகம் தவிர்ந்து கொள்ளல் வேண்டும்.

ii. செய்தியுடன் நேரடியாக தொடர்பு அற்ற பட்சத்தில் ஒருவரின் குலம்இ சாதிஇ மதம்இ பாலியல் சாய்வுஇ உடல் அல்லது மனநோய் அல்லது குறைபாடு பற்றிய விவரங்களை பிரசுரித்தல் தவிர்க்கப்பட வேண்டும்.

**இஸ்ரேலிய பத்திரிகைப் பேரவை**

இம்சைப்படுத்தலும் இனத்துவமும் : -

இஸ்ரேல் நாட்டின் பத்திரிகைப் பேரவையின் ஒழுக்கக் கோவையின் பிரிவு 14:- பத்திரிகையொன்று இனத்துவ விடயங்களை அறிக்கையிடும்போது இனரீதியான அல்லது மத, உடல் ரீதியான வர்ண வேறுபாடுகள், மத வேறுபாடுகள் அல்லது மத ரீதியான மனத்தாங்கள்களை ஏற்படுத்தும் விதமாக, மத நம்பிக்கைகளைச் சிதைக்கும் அடிப்படையில், அல்லது உள ரீதியான குறைபாடுகளை வெளிப்படுத்தும் வகையிலான அறிக்கையிடல், பௌதீக ரீதியான பலவீனங்களை வெளிப்படுத்துவது என்பன செய்தி மற்றும் கட்டுரைகள் வாயிலாக பிரஸ்தாபிப்பது மற்றும் சுட்டிக்காட்டுவது என்பன தவிர்க்கப்பட வேண்டும் என்று கூறுகின்றது.

**ஜேர்மனியின் பத்திரிகைப் பேரவை**

இன அடிப்படையிலான பாகுபாடு காட்டல்: -

பத்திரிகைகள் அறிக்கையிடல் மூலம் மத அல்லது இன அடிப்படையிலான நிந்தனை அல்லது இம்சைப்படுத்தல் மற்றும் மனத்தாங்கள்களை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகளை தவிர்க்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றது.

**இங்கிலாந்தின் பத்தரிகிகை ஆசிரியர்களுக்கான ஒழுக்கக் கோவை**

இங்கிலாந்து பத்திரிகை அசிரியர்களுக்கான ஒழுக்கக் கோவையின் பிரிவு 12 (i) இன அடிப்படையிலான மனத்தாங்கள் களுக்கு காரணமாக அமையும் அறிக்கை யிடலைத் தவிர்க்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றது. எந்தவிதமான அடிப்படையிலும் இன, மத, மொழி, பால் ரீதியான விடயங்களை அறிக்கையிடும் போதும் எந்தவொரு மதக் குழுவினருக்கோ சமூகத்தினருக்கோ பாதிப்பை அல்லது மன நோவினையை ஏற்படுத்தும் விதமாக பத்திரிகைகள் பிரசுரங்களை மேற்கொள்வதைத் தவிர்க்க வேண்டும் என்று அந்நாட்டின் ஒழுக்கக்கோவயின் பிரிவு குறிப்பிடுகின்றது.

இவ்வாறே அயர்லாந்து, சேர்பியா, அசர்பைசான், மாலைத்தீவு ஆகிய நாடுகளின் ஒழுக்கக்கோவைகளிலும் தனித்தனியான பிரிவுகளில் எந்தவொரு இனத்திற்கும் மனத்தாங்கள் ஏற்படுத்தும்விதமான அறிக்கையிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்று குறிப்பிடப் பட்டிருக்கின்றது.

# தகவல் பெறும் உரிமை (RTI) பற்றி ஊடக அமைச்சின் செயலாளரின் கருத்து குறித்து ஊடகங்களின் பொறுப்பு

தேசிய பாதுகாப்பை கருத்தில் கொண்டு அரசாங்கம் தகவல் அறிவதற்கான உரிமையை வழங்கும் சட்டத்தை அறிமுகம் செய்யாது என்று புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள தகவல் ஊடக அமைச்சின் செயலாளர் சரித ஹேரத் தெரிவித்திருந்த கருத்து தொடர்பாக ஊடக அமைப்புக்களின் கவனம் செலுத்தப் பட்டிருக்கின்றது. அவர் இவ்வாறு கூறியதாக கடந்த ஜுலை மாதம் 30 ஆம் திகதி வெளியாகிய "த ஐலன்ட்" என்ற ஆங்கிலப் பத்திரிகை பிரசுரித்திருந்த கருத்து தொடர்பாகவே இவ்வாறு கவனம் செலுத்தப்பட்டிருக்கின்றது.

திரு சரித ஹேரத் அவரின் உரையில் தெரிவித்தாக குறிப்பிட்டு அப்பத்திரிகை வெளியிட்டிருந்த விடயங்கள் வருமாறு : 2009 ஆம் ஆண்டு காலத்தில் நடைபெற்ற ஆயுத முரண்பாட்டை அடிப்படையாக வைத்து அரசாங்கத்துடன் தொடர்புபட்ட அனைத்து விடயங்களையும் அரசாங்கத்தால் பகிரங்கமாக பரிமாறிக் கொள்ள முடியுமான நிலை இல்லாதிருக்கின்றது. இவ்வாறு அரசாங்கத்துடன் தொடர்புபட்ட முக்கியமான விடயங்கள் வெளியில் அம்பலமாகுமானால் அதனை எதிரிகள் சாதகமாகப் பயன்படுத்தும் நிலை ஏற்படலாம். இது அரசாங்கத்திற்கும் தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமையலாம் என்று அரசாங்கம் கருதுகின்றது.
அண்மையில் கொழும்பில் நடைபெற்ற தெற்காசிய ஊடக உள்ளக பயிற்சி செயலமர்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போது ஊடகவியலாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார் என்று அச்செய்தி குறிப்பிட்டிருந்தது.

ஊடகவியலாளர் தமது கேள்வியில் தெற்காசியாவில் ஏனைய நாடுகளில் தகவல் அறிவதற்கான உரிமை சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட நிலையில் இலங்கையில் ஏன் இன்னும் அதற்கான உரிமை வழங்கப்படாதிருக்கின்றது (Right to Information Act) என்று கேட்டிருந்தார்.
இதற்கு பதிலளிக்கையிலே ஊடக அமைச்சின் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். இவ்விடயம் குறித்து ஊடக அமைப்புக்கள் கவலையும் அதிர்ச்சியும் வெளியிட்டிருக்கின்றன.

தகவல் அறிவதற்கான உரிமையை வழங்கும் சட்டமூலம் 2004 ஆம் ஆண்டு அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டதாகும். பின்னர் அதில் திருத்தம் செய்யப்பட்டது. அதேநேரம் பாதுகாப்புத்துறையின் இரகசியங்களை வெளிப்படுத்தாத வகையில் திருத்தங்களை உட்படுத்தியதாக தகவல் அறியும் சட்டம் உலகில் பல நாடுகளில் அமுலில் இருந்து வருகின்றது. அதனால் இலங்கையிலும் அரசாங்கம் இந்த சட்டமூலத்தை நடைமுறைக்கு கொண்டுவராமலிருப்பதற்கு எந்த விதமாக நியாயமான காரணமும் இல்லலை என்று ஊடக அமைப்புக்கள் விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவித்துள்ளன.
ஆகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி வெளியிட்டுள்ள அறிக்கையில் பின்வரும் அமைப்புக்கள் கையொப்பமிட்டுள்ளன.

- இலங்கை பத்திரிகை பிரசுரத்தார் அமைப்பு
- இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் அமைப்பு
- இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம்
- சுதந்திர ஊடக அமைப்பு

---

# விளம்பரத்துறையில் சுய கட்டுப்பாட்டு ஒழுக்கக்கோவை

விளம்பரத்துறைக்கான ஒழுக்கக்கோவை காலத்தின் தேவை கருதியதாகும். விளம்பரங்களின் உயர் தராதரம், பாவனையாளர்கள் மத்தியில் நம்பிக்கையை வளர்த்த உறுதிப்படுத்தல் மற்றும் பாவனையாளர்களின் பாதுகாப்பு ஆகிய விடயங்களைக் கவனத்தில் எடுக்கும்போது விளம்பரத்துறைக்கு ஒழுக்கக் கோவையொன்று அவசியம் என்பது உணரப்பட்டிருக்கின்றது.

அவுஸ்திரேலியாவின் தேசிய விளம்பரதாரர்களுக்கான அமைப்பு (யுரளவசயடயை யுளளழஉயைவழை ழக யேவழையெட யுனஎநசவளைநசள) 1998 ஆம் ஆண்டு அந்நாட்டின் விளம்பரத்துறையினர் மற்றும் அரசாங்க பிரதிநிதிகள் ஆகியோருடன் கலந்துரையாடி விளம்பரத்துறைக்கான ஒழுக்கக்கோவையொன்றை வகுத்திருக்கின்றது.

ஊடகத்துறையில் மாத்திரமன்றி விளம்பரத்துறையிலும் சுய கட்டுப்பாட்டு ஒழுக்கக்கோவை தனிச்சிறப்பையும் மக்களுக்கான பாதுகாப்பையும் வழங்குவதோடு குறிப்பிட்ட துறைக்கு நன்மதிப்பையும் வழங்குகின்றது. அத்துடன் விளம்பரங்களால் பொதுமக்கள் ஏமாற்றப்படுவதைத் தடுத்து நிறுத்தி அவர்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பி பாதுகாப்பை வழங்க முடிகின்றது.

ஊடகத்துறையில் சுயகட்டுப்பாட்டு ஒழுக்கக்கோவயையானது ஊடக விளம்பரத்துறைக்கு சுயமாகப் பினபற்றத்தக்க ஒழுங்குவிதிகளையும் கட்டுப்பாடுகளையும் அறிமுகம் செய்வதாய் அமைகின்றது. ஏனெனில் விளம்பரங்கள் மூலம் மக்களது உணர்வுகளைப் பாதிக்கும் வகையில் ஊடக செயற்பாடுகள் அமையும் போது மக்கள் ஊடகங்களையெ வெறுக்கும் நிலை ஏற்படுகின்றது.

இன, மத, கலாச்சார, பண்பாட்டு ரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்தும் விளம்பரங்களை மக்கள் ஒருபோதும் விரும்புவதில்லை. விளம்பரத்துறை முழுமையாக உச்ச இலாபத்தைக் குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் போது இத்தகைய பாதிப்புக்களை கவனத்தில் கொள்ளத் தவறிவிடுகின்றது. இத்தகைய நிலைகளைத் தவிர்க்கும் வகையில் அவுஸ்திரேலிாவில் கடைபிடிக்கப்படுகின்ற விளம்பரத்துறைக்கான ஒழுக்கக்கோவை விளம்பரங்களால் சமூகத்திற்கு எற்படும் பாதிப்புக்களில் இருந்து பாதுகாக்கின்றது. அதற்காக விளம்பர தராதரம் பேனும் செயலகமும் ஏற்பபடுத்தப்பட்டிருக்கின்றது.

இந்த செயற்பாட்டுக்கு அவுஸ்திரேலியாவின் ஊடகக் கைத்தொழில்துறையும் கூடுதல் முக்கியத்தவம் வழங்கி ஒத்துழைக்கின்றன. அதனால் விளம்பரங்களால் ஏற்படும் சமூகப்ப பாதிப்புக்களைக் கட்டுப்படுத்த முடிகின்றது. அத்துடன் ஊடகங்கள் மற்றும் விளம்பரங்களின் தராதரம் பேனிப் பாதுகாக்கப்படுவதொடு அதில் மக்கள் வைத்தள்ள நம்பிக்கையும் உயர் நிலையில் மதிக்கப்படுகின்றது.

Editor: Sukumar Rockwood - PCCSL
Design & Layout by : Priyadharshini - *SLPI*